# ஆங்காரம்
# நீக்கும்
# ஓங்காரம்



ப்ரக்ருன்

# ஆங்காரம்

## நீக்கும்

# ஓங்காரம்



## ப்ரக்ஞன்

ஓம் குருப்யோ நமஹ

# ஆங்காரம் நீக்கும் ஓங்காரம்

"**ஓம்**" என்பதையே '**ஓங்காரம்**' என்று அழைக்கிறோம். இந்த "**ஓம்**" என்ற ஒற்றை வார்த்தையை '**அ**', '**உ**', '**ம**' என்ற மூன்று எழுத்துக்கள் ஒருங்கிணைந்த நிலையில் உண்டான ஒரு சொல்லாக நம் முன்னோர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த "**ஓம்**" என்ற ஒன்றைக்கொண்டு தொடங்காத மந்திரங்களே இல்லை எனலாம். ஏன்? இந்த "**ஓம்**" என்ற சொல் எல்லா மந்திரங்களுக்கும் முதலாவதாக கொடுக்கப்பட்டுள்ளது? மேலும், இந்த எழுத்துக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது? போன்ற சந்தேகங்கள் பலருக்கும் இதன் பயன்பாட்டில் உள்ளது.

இது இந்துமத இறை வழிபாட்டில் பயன்படுகின்ற எல்லா வேத மந்திரங்களுக்கும் முன்னால், "**ஓம்**" கொடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், இந்த உலகம் இயங்கத்தேவையான **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழிலை புரியக்கூடிய புதிரான எழுத்தாக இந்த "**ஓம்**" எழுத்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது, படைக்கப்பட்ட அனைத்து சீவராசிகளிலும் மனிதன் மட்டுமே மகத்தான பகுத்தறிவைக் கொண்டவன் என்பதினால், அவனால் மட்டுமே எழுத்துக்களைக்கொண்டு, அழகான சொற்களை வடிவமைத்து, அதன் வாயிலாகப் பேசக்கூடிய சக்தியைக் கொண்டவன்.

ஆகவே, அவன் சாதாரணமாக வாயை திறக்க முற்பட்டாலேயே, அது "**அ**" என்ற அமைப்பில் மட்டுமே திறக்க முடியும். அதனால், அவனிடமிருந்து முதன் முதலாக வெளிப்படும் ஓசை என்பது '**அ**' என்று உதிக்கின்றது. அதன் பிறகுதான் மற்ற வார்த்தைகள் உண்டாகும். அதிலே, அந்த '**அ**' என்ற உச்சரிப்பின் நீட்டம் '**உ**' என்று காக்கப்பட்டு, இறுதியில், அந்த ஓசையின் முடிவாக '**ம்**' என்று முற்று பெறுகிறது.

இதனால், ஒரு **சொல் பிறந்து, வளர்ந்திருந்து, இறுதியில் இல்லாமல் போவதைக்** குறிக்கும் குறியீடாக இந்த "**ஓம்**" என்பது இருப்பதினாலே, இந்த பிரபஞ்சத்தில் **படைத்தல், காத்தல், அழித்தல்** ஆகிய முத்தொழில்கள் நடைபெறுகின்றது என்பதை எடுத்துக்கூறுவதே, இந்த "**ஓம்**" என்ற பதத்தின் பரமபத பாதையாகும்.

இந்த "**ஓம்**" பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம்.

இந்து சமயத்தில் வேதத்தில் இருந்து, **உபநிஷதங்கள், கீதை, பாஷ்யங்கள்** என்று எங்கு பார்த்தாலும் இந்த "**ஓம்**" சிறப்பித்து கூறப்படுகிறது.

அப்படி என்ன அதில் சிறப்பு இருக்கிறது?

அது ஒரு வார்த்தை - அவ்வளவுதானே!...

மற்ற வார்த்தைகளுக்கும் அதற்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்கப்போகிறது? என்று நினைத்தீர்களேயானால், அதைப்பற்றி அறிந்து கொள்ளுமுன் **மொழி, ஒலி, பொருள், சொல்** என்ற இவைகளைப் பற்றியும் கொஞ்சம் அறிந்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, இந்த உலகில் எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன. எவ்வளவோ மனிதர்கள், விலங்குகள் பறவைகள், பூச்சிகள், பூக்கள் என இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் **ஒரு பெயர்** இருக்கிறது அல்லவா?

அதிலே, நம்முடைய வீட்டிலேயே நாம் அன்றாடம் அனுகும் விசயங்களில், **அம்மா, அப்பா, டீவி, காபி, புத்தகம், நாய், கொசு, மேஜை, நாற்காலி** என்று ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் இருக்கிறது இல்லையா?

ஆக, ஒரு பெயர் இருக்கிறது என்றால், அதற்கு ஒரு பொருள் (அர்த்தம்) இருக்கிறது.

இதிலே, பொருள் என்றால், அந்த வார்த்தையின் அர்த்தம் மட்டுமல்ல, அதை சுட்டிக்காட்டும் அதற்கான பல பெயர்களும் இருக்கலாம். அதாவது, ஒவ்வொரு மொழியிலும் அந்த பொருளுக்கு ஒரு பெயர் இருக்கும்.

உதாரணமாக, நம்மை பெற்ற தாயை தமிழில் '**அம்மா**' என்கிறோம். ஆங்கிலத்தில் '**மதர்**' என்கிறோம். ஹிந்தியில் '**மாதாஜி**' என்கிறோம். மலையாளத்தில் '**அம்மே**' என்று சொல்கிறோம். இப்படி ஒவ்வொரு பொருளுக்கும் (இங்கே பொருள் என்பது உயிர் உள்ளது, உயிர் இல்லாதது என எல்லாமே சேர்த்தது) ஒரு சொல் (வார்த்தை) இருக்கிறது.

அத்துடன், அந்த சொல்லின் உச்சரிக்கும் **ஒலி வடிவம்** மாறலாம். ஆனால், அதன் **பொருள் (அர்த்தம்)** மாறாது.

சரி!, இதுவரை **பொருளுக்கும், சொல்லுக்கும்** உள்ள தொடர்பை சிந்தித்தோம். அடுத்தது, **சொல்லுக்கும், நினைவுக்கும்** உள்ள தொடர்பை சிந்திப்போம்.

ஒரு சொல் வெளியில் வர வேண்டும் என்றால், முதலில் அது மனதில் அல்லது புத்தியில் தோன்ற வேண்டும்.

அதிலே, நாம் நம் அம்மாவைப் பார்த்தவுடன் அது அம்மா என்று நமக்குத் தோன்றுகிறது. பின், அம்மா என்ற சொல் நம் மனதில் உதிக்கிறது. பின் அந்த சொல் **ஒலி வடிவம்** பெறுகிறது. **எண்ணங்களுக்கும், சொல்லுக்கும், பொருளுக்கும்** உள்ள ஒரு தொடர்பு இது என்று கூறலாம்.

நம்மிடம் ஆயிரக்கணக்கான எண்ணங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அந்த ஆயிரமாயிரம் எண்ணங்களில், ஒரு எண்ணம் சொல்லாக வெளிப்பட்டு ஒரு பொருளை (அதன் அர்த்தத்தை) குறிக்கிறது.

இவ்வாறு, இவைகள் எல்லாம் இருந்தாலும், இந்த எல்லா படைப்புகளுக்கும் பின்னால், ஒரு படைப்பாற்றல் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அதைத்தான் நாம் அனைவரும் "**உன்னை நீ அறிவாயா!**" என்ற பாடத்திட்டத்தின் மூலம், அதை **ஈஸ்வர சக்தி** என்று அறிந்துக் கொண்டோம்.

அந்த சக்திக்கு ஒரு பெயர் வேண்டும் இல்லையா?

அந்த பெயர் என்பது, அந்த சக்தியின் படைப்பாற்றலை குறிக்கும் ஒரு சொல்லாக அது இருக்க வேண்டும். மேலும், அது ஒரு இயற்கையான சொல்லாகவும் இருக்க வேண்டும். அத்துடன், அது எந்த மொழிகளுக்குள்ளும் வராத ஒன்றாகவும் இருக்க வேண்டும்.

எனவேதான், "**ஓம்**" என்ற ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஏன் ஓம்? ஏன்? வேறு ஏதாவது ஒரு சொல்லை தேர்வு செய்து இருக்கலாமே! என்றால், "**ஓம்**" என்ற சொல்லின் சப்தம், மூன்று சப்தங்களை உள்ளடக்கியது ஆகும்.

அவைகள், **அ, உ, ம்** என்ற மூன்று எழுத்தின் தொகுப்பாகிய "**ஓம்**" என்று கூறலாம்.

இந்த மூன்று எழுத்தையும் வேகமாக கூறினால் "**ஓம்**" என்ற வரும்.

சரி!, வந்து விட்டு போகட்டும், அதனால் ஒரு சிறப்பு வந்து விடுமா என்ன? என்று கேட்டீர்களேயானால், இதற்கு, இரண்டு விஷயங்கள் தெரிய வேண்டும்.

அவைகள், ஒன்று **இயற்கை**. மற்றொன்று **தொழிற் பெயர்.**

இந்த இயற்கையான படைப்பாற்றல் என்பது நமக்குள் இயல்பாகவே இருக்கிறது. நாம் அதோடுதான் பிறக்கிறோம். அதை இந்த "**ஓம்**" என்ற ஒன்றைச் சொல் நினைவு படுத்துகிறது.

அது எப்படி?

அதாவது, சும்மா வாயை திறவுங்கள். '**அ**' என்ற சப்தம் இயல்பாக வரும்.

அப்படி வந்த '**அ**' என்ற சப்தத்தை நீண்ட நேரம் நம்மால் நிறுத்த முடியாது. ஆக, '**அ**' என்று சொல்லும்போது, நமது மூச்சு வெளியே போய்விடும்.

அதனால், அந்த வார்த்தை சட்டென்று நின்று போகும். ஆகவே, அதை இயல்பாக நிறுத்த வேண்டும் என்றால், '**உ**' குவியுங்கள். அதன்பிறகு, அந்த 'அ' என்ற சப்தம் '**உ**' என்று ஆகும். அதை முடிக்க வேண்டும் என்றால் குவித்த வாயை மூடுங்கள். இப்போது, அது '**ம்**' என்று முடிந்து விடும்.

இதை விட இயல்பான ஒரு சப்தத்தை உங்களால் உருவாக்க முடியுமா?

சரி!, ஓம் என்பது ஒரு இயல்பான சப்தம். இது ஏதோ கேட்பதற்கு சாதரணமாகத்தான் தெரிகின்றது என்று கூறினீர்களேயானால், மற்ற கடவுள்களின் பெயர்களை கூறிப்பாருங்கள்...

ஏதாவது எளிமையாக இருக்கிறதா?

நிச்சயமாக இந்த "**ஓம்**" என்ற சொல் போன்று அவைகள் இருக்காது.

அடுத்தது, பெயர்கள் இரண்டு வகைப்படும்.

அவைகள், ஒன்று இடுகுறிப் பெயர். மற்றொன்று, காரணப் பெயர். அதற்கும், இந்த "**ஓம்**" என்ற பிரணவ மந்திரத்தத்துக்கும் என்ன சம்பந்தம்?

அதையும் சிந்திப்போம்!

"**ஓம்**" என்ற சொல் காரணப்பெயர் ஆகும். அது என்ன காரணம் ?

அதாவது, நமக்குள்ளே இருக்கும் படைப்பாற்றத்தான் ஈஸ்வரன் என்று பார்த்தோம்.

அந்த படைப்பாற்றல் என்ன செய்யும்? முதலில் படைக்கும், பின் படைத்தவற்றை காக்கும், பிறகு, வேண்டாத அல்லது காலாவதியான படைப்புகளை எல்லாம் அழிக்கும்.
சரி!, இதிலே, அழிப்பது எப்படி படைப்பாகும்?

அதுவும் படைப்புதான். அதாவது, ஒன்றை அழிக்காமல் இன்னொன்றை படைக்க முடியாது. நாம் எதை படைக்க வேண்டும் என்றாலும், அதற்கு ஒரு சக்தி வேண்டும். அந்த சக்தி நாம் உண்ணும் உணவில் இருக்கிறது. அந்த உணவை உண்டு, ஜீரணம் செய்து, அதில் இருந்து பெற்ற சக்தியால்தான், நாம் இந்த உடல் என்ற படைப்பை செய்கிறோம்.

அதுப்போல, ஒரு மலையை உடைத்து, அதில் இருந்து பல பாறைகளை எடுத்து, அவைகளில் அழகான **கடவுள் சிற்பங்கள்** செய்கிறோம். ஆக, இப்படி **அழிப்பதும், படைப்பதும்** ஒன்றாக சேர்ந்தே நிகழ்கிறது.

இந்த **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழிலை மூன்று கடவுள்கள் செய்வதாக கூறுகிறார்கள். ஆனால், அந்த மூன்று கடவுளும் ஒன்றுதான். அந்த ஈஸ்வர சக்தியின் சாந்நித்தியம் நமக்குள்தான் சுடர் விட்டுக் கொண்டு இருக்கிறது.

இந்த மூன்றும் ஒரே ஒரு சக்திதான் என்றால், அதற்கு ஒரு பெயர் இருக்க வேண்டும் அல்லவா? அதாவது, ஒரு பொருள் என்று இருந்தால், அதற்கு ஒரு பெயர் இருக்க வேண்டும் இல்லையா?

அதன் பெயர் பிரணவம் என்ற "**ஓம்**".

'**அ**' என்று சொல்லும் போது சொல் பிறக்கிறது.

‘உ’ என்று சொல்லும் போது அது நிலைக்கிறது.

அதாவது, ‘**அ**’ என்ற சப்தத்தை நீண்ட நேரம் சொல்ல முடியாது. மூச்சு காற்று வேகமாக வெளியேறி விடும். அதுவே, ‘**உ**’ என்று சொல்லும் போது, நீட்டி நெடுநேரம் சொல்லலாம். வேண்டுமானால், சொல்லிப் பாருங்கள். ‘**ம்**’ என்று சொல்லும் போது, அந்த சப்தம் முடிகிறது.

இப்படி, தோற்றம், நிலைப்பு, முடிவு என்ற மூன்றையும் ஒன்றாச் சேர்த்து ஒரு வார்த்தையில் சொல்வது என்றால், அதுதான் “**ஓம்**” என்ற ஒரு வார்த்தைச் சொல். பொதுவாக, “**ஓம்**” என்ற பிரணவம் இயல்பான ஒரு சப்தம்.

அதாவது, “**ஓம்**” என்ற பிரணவம் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் கூறும் ஒரு சொல்.

மீண்டும் தொடங்கிய இடத்துக்கே இப்போது வருவோம். அம்மா என்று சொன்னால், உங்களுக்கு உங்கள் தாயின் நினைப்பு வரும் அல்லவா?. அப்படியே, லட்டு என்று சொன்னால் அந்த லட்டின் ஞாபகம் வருகிறது அல்லவா?

ஆக இதிலிருந்து என்ன தெரிகின்றது?

ஒரு சொல் என்று இருந்தால், அது குறிக்கும் பொருளை, அதாவது, அதன் அர்த்தத்தை நம் நினைவுக்கு கொண்டு வரும். அது மட்டும் அல்ல, அந்த பொருள் சம்பந்தமான **உணர்ச்சிகளையும்** நம்மிடம் கொண்டு வரும்.

இதை, **நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.**

ஆக, லட்டு என்று சொன்னால், நம் நாக்கில் எச்சில் ஊறும். காதலியின் பெயரைச் சொன்னால், காதலன் முகம் மலருகின்றது. எனவே, ஒரு சொல் என்பது, அது குறிக்கும் **பொருளையும்,** அதன் சம்பந்தமான **உணர்ச்சிகளையும்** நமக்குக் கொண்டு வந்துவிடுகின்றது.

அதுப்போல, இந்த “**ஓம்**” என்ற சொல், நமக்குள் இருக்கும் அந்த மாபெரும் படைப்பாற்றலை, அதன் சக்தியை நமக்கு உணர வைக்கின்றது. அதை உணரக்கூடிய உயரிய படைப்பாகிய மனிதன் உன்னதமானவன், உயர்ந்தவன், அவன் படைப்பின் உச்சக்கட்டம் என்றும் கூறலாம்.

அவன், தன்னைத் தான் அறியாததால் கீழே விழுந்து விட்டவன். தன் திறமை, ஆற்றல் தெரியாமல் தவிப்பவன். அவனை கைதூக்கி விட்டு, அவனுடைய திறமையை, ஆற்றலை அவனுக்கு நினைவுப் படுத்துவது ஒன்றே, இந்த “**ஓம்**” என்ற ஒற்றைச் சொல்.

சரி!, அந்த சொல் நமக்குள் மறைந்து கிடக்கும் ஆற்றலை குறிப்பதாக இருக்கட்டும். அதை எப்படி வெளியே கொண்டு வருவது?.

நமக்குள் இருக்கும் அளவற்ற படைப்பாற்றலின் பெயர் “**ஓம்**”. எப்படி ஒவ்வொரு செயலுக்கும், ஒரு வார்த்தை இருக்கிறதோ? அதுப்போல, நமக்குள் இருக்கும் சக்தியின் பெயர் “**ஓம்**”.

சரி!, அந்த சக்தி நமக்குள் இருக்கிறது என்று புரிகிறது. அத்துடன், அந்த சக்திக்கு ஒரு ஒலி வடிவம் உள்ளது. அதன் பெயர் “**ஓம்**” என்றும் புரிகிறது.

அதனால் என்ன? அந்த சக்திக்கு ஒரு பெயர் வைத்திருக்கிறார்கள். அவ்வளவுதானே!...
இதனால் நமக்கு என்ன பயன்?

நமது நோக்கம், **அந்த சக்தியை வெளியே எப்படி கொண்டு வருவது?** என்பதுதான்.

இந்த பூமியில் எவ்வளவோ பெரிய பெரிய அறிஞர்கள், மஹான்கள் எல்லாம் தோன்றி இருக்கிறார்கள். அவர்கள் மிகப் பெரிய உண்மைகளை இந்த உலகுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

இதில், எத்தனையோ கண்டு பிடிப்புகள், அதற்கான சாதனங்கள், அத்தனையும் அந்த படைப்பாற்றலின் வெளிப்பாடு எனும்போது, அவர்களுக்குள் இருக்கும் அந்த படைப்பாற்றல்தான் நமக்குள்ளும் இருக்கிறது.

ஆனால், அவர்கள் அதை வெளியே கொண்டு வந்தார்கள். நமக்குள் அது உறங்கிக் கிடக்கிறது.

அதை எழுப்பி வெளியே கொண்டு வருவதைத்தான் இங்கு '**திருப்பள்ளியெழுச்சி**' என்று கூறப்படுகின்றது.

ஆக, அந்த பிரணவ மந்திரத்தின் அர்த்தம் புரிந்து, அதை உணர்வு பூர்வமாக நமக்குள் உணர்ந்துக் கொள்வதன்மூலம், நம்முள் இருக்கும் அந்த **அபரிமிதமான ஆற்றல்** வெளிப்படுகின்றது என்கின்றனர் மஹான்கள்.

அதற்காக, வெறுமனே அந்த ஓங்காரத்தை "**ஓம்**","**ஓம்**" என்று முணு முணுப்பதால் ஒரு பயனும் இல்லை. அப்படி செய்வதால் கொஞ்ச நேரத்தில் **மனதும், மூளையும்** சோர்ந்து போய் தூக்கம்தான் வரும். அதனால், நமக்கு ஒரு பயனும் இல்லை.

ஆகவே, "**ஓம்**" என்ற அந்த பிரணவத்தின் பொருள் உணர்ந்து அதை உபாசனை செய்ய வேண்டும். அதாவது, அதை நம் உணர்வு பூர்வமாக உணர வேண்டும்.

இதன் அர்த்தம் என்ன?

எனக்குள் ஒரு மிகப் பெரிய படைப்பாற்றல் இருக்கிறது. அதுவே, ஈஸ்வர சக்தி. அது நம்முள் நம் இயல்பாக இருப்பதை நாம் உணர வேண்டும்.

இதைத்தான் மணிவாசகப் பெருமான் தமது திருவாசகத்தில், "சொல்லிய பாட்டின் பொருள் "**உணர்ந்து**" சொல்வர், செல்வர் சிவபுரம்" என்கிறார். அதையே, தெய்வப் புலவர் சேக்கிழார் "உலகெல்லாம் "**உணர்ந்து**" ஓதற்கரியவன்" என்கிறார்.

இங்கே, இவர்கள் கூறவருகின்ற "**உணர்வு**" என்ற சொல்லை நாம் மறந்தும் கூட விட்டு விடக்கூடாது. அதாவது, "**ஓம்**" என்பதின் பொருள் அறிந்து, நமக்குள் அதை உணர்ந்துக் கொள்ள வேண்டும் என்கின்றனர். ஏனெனில், உணர்வே இறைவன்.

அதாவது, இறைவனை நம் **சனாதன தர்மம்** மட்டுமே, "**பிரஞ்ஞானம் பிரம்மம்**" என்று எடுத்துக் கூறுகின்றது.

ஆக, '**பிரஞ்ஞையே இறைவன்**', '**உணர்வே இறைவன்**', அல்லது '**அறிவே இறைவன்**' என்கின்றது.

இதிலிருந்து, நாம் அறிய வேண்டிய அரிதான உண்மை என்னவெனில், நாம் நம்மிடம் உள்ள சாதாரண ஊனக் கண்களால், அந்த இறைவனைப் பார்க்க முடியாது. ஆனால், அந்த உணர்வாகிய இறைவனை நம்முள் உணர்ந்துக் கொள்ள மட்டுமே முடியும். அதனால்தான் படைக்கப்பட்ட சீவராசிகளில் தாவரங்கள் முதற்கொண்டு தொடுவுணர்வு கொடுக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், அவ்வாறு படைக்கப்பட்டவைகள், அந்த உணர்வுப் பரிமாணத்தில் படிப்படியாக உயரிய இடத்திற்கு வர முடிந்ததில், மகத்தான மனிதன் மட்டுமே, மிக உயரிய படைப்பாக தன்னிடம் உள்ள ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட நன்மை, தீமைகளைப் பகுத்தறியக்கூடிய பிரத்யேக, "**மனம்**" படைத்தவனாகவும் இருக்கின்றான்.

ஆகவே, மனமாகிய அவனிடமுள்ள பகுத்தறிவு கொண்டு, அவனுக்குக் கிடைத்துள்ள அனைத்து **ஞானேந்திரியங்கள்** மூலமாக, எல்லாவிதமான ஞானத்தையும் அவனால் அடைய முடியும்.

அதிலே, அந்த இறைவன் தன்னுள் **ஆன்ம சக்தியாகவும், அறிவு சக்தியாகவும், உணர்வு சக்தியாகவும்** வெளிப்படுகின்றான் என்பதை, இவனிடம் உள்ள காதுகள் என்ற புலன் மூலமாக, அந்த இறைவனைப் பற்றிய சாஸ்திர ஞானத்தை அடையும்போது, அவன் தன்னைப் பற்றிய ஞானத்தையும் புரிதலுடன் அடைகின்றான்.

அதனால்தான், '**கற்றலின் கேட்டலே நன்று**' என்பது பழமொழி. "**செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்**" என்பதும் இதுவே.

இதை, நம்முடைய சாஸ்திரங்கள் சிரவண, மனன, நிதித்யாஸனம் என்று எடுத்துக் கூறுகின்றது. ஆக, அந்த இறைவன் உணர்வாகவே உள்ளான் என்பதை எந்த மதங்களாலும் எடுத்துக் கூற முடியாவிட்டாலும், நம் **சனாதன தர்மம்** மட்டுமே, அதை ஆணித்தரமாக நமக்கு எடுத்து அறிவுறுத்தப்படுகின்றது.

அதற்காக, '**எழுதாக்கிளவி**' என்ற வேதம் மனிதர்கள் யாராலும் எழுதப்படாமல், வேத மந்திரங்களாக, நம் காதுகளால் கேட்பதற்காக மட்டுமே வெளிப்பட்டது.

ஆயினும், இந்த வேத மந்திரங்களைக்கேட்டு, அதன் பொருள் உணர்ந்துக் கொள்ளக் கூடிய பக்குவமில்லாத பாமர மக்களுக்காக, அவர்களின் மீது கருணைக்கொண்ட நம்முடைய பண்டைய ரிஷிகள் மொத்த வேதத்தின் வேராக, இந்த "**ஓம்**" என்ற **ஓம்காரத்தை - பிரணவத்தை** எளிதாக எல்லோரும், அதன் பொருள் புரிந்து, கேட்டுப் பயன்பெறும் விதமாகப் படைத்துக் கொடுத்தனர்.

நம் உயிராகிய பிராணனில் இருந்து, "**ஓம்**" உருவாகி வெளிப்பட்டுக் கொண்டிருகின்றது. நம்மால் அதை உணர முடியாத அளவிற்கு, நாம் உணர்விலிருந்து, வெகுதூரம் விலகி வந்துவிட்டோம். அதற்குக்காரணம், நம்மிடம் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள் நம்மை நாம் அறிய முடியாதவாறு, ஒரு வரையறைக்குள் நம்மை வைத்திருக்கின்றது. அதாவது, நம்மிடம் உள்ள உயிர் சக்தியை நாம் உணர முடியாமல் இருக்கிறோம். நம் உயிராகிய பிராணனில் சுவாசமாகவே "**ஓம்**" இருப்பதினால்தான், இதை "**அஜபா மந்திரம்**" என்றும் அழைக்கின்றோம்.

எனவே, "**ஓம்**" என்ற மந்திரத்துக்கு **பிரணவ மந்திரம்** என்ற பெயரும் உள்ளது.

பிரணவம் என்றால் சுவாசம் என்று பொருள். சமஸ்கிருதத்தில் பிரணவ என்றால், "**அண்ட ஒலி**" என்றும் பொருள். மனிதன் இயங்க அவனுக்கு **சுவாசம்** அவசியம். அதுப்போல, இந்த பிரபஞ்சம் இயங்க வேண்டுமனால் அதற்கு "**ஓம்**" அவசியம்.

நம் உடம்பின் உள்ளே தோன்றும் தச வாயுக்களாலும், உடலில் உள்ள அக்னியின் மேல் செல்லும் போக்காலும், இந்த பிரணவ "**ஓம்**" உடம்பின் கீழிருந்து, மேல் நோக்கி நம்முடைய உச்சந்தலைக்கும் அதற்கு மேலும் தடையின்றி செல்லும். அப்படிப் போகும்போது பெயர், எல்லை, ஒளி, நிறம், தெய்வம், அளவு, வடிவம், சூன்யம் ஆகிய பகுதிகளை வரையறை செய்து உணர்ந்தால், ஓங்காரம் பிரபஞ்சத்துடன் ஒன்றி உடலில் பரவுவதை அனுபவிக்கலாம்.

ஆக, இந்த ஞான ஒளி, நம் உள் ஒளியாகி குண்டலினி சக்தியாக வெளிப்படும். எனவே, "**ஓம்**" என்ற பிரணவம் குண்டலினியாகிய அறிவு ஒளியை கீழ் மட்டத்திலிருந்து படிப்படியாக மேல் மட்டத்திற்கு உயர்த்தி, நம் அக அறிவை மேம்படுத்தக்கூடிய பிரபஞ்ச ஆற்றலாகவும் திகழ்கின்றது.

பிரணவ யோகம் என்பது, "**ஓம்**" என்ற மந்திரத்தின் மீது, நம் மனதை ஒருமுகப்படுத்தி, அதன் புனிதத் தன்மையை சிந்தித்து, ஒவ்வொரு மூச்சிலும் அந்த மந்திரத்தின் உண்மைத் தன்மையை உணர்ந்துக் கொள்வதாகும். அதாவது, நமக்கும், இந்த பிரபஞ்சத்துக்கும் உள்ள தொடர்பைப் புரிந்துக் கொள்வது என்பது, மாயையிலிருந்து விடுபட்ட நமது உண்மையான சுயத்தை அறிவதாகும். அதுவே, பிரணவத்தின் சாராம்சமாகும்.

இத்துடன், ஏற்கனவே நமது முற்பிறவி பதிவுகளாக நமக்குள் இருக்கும் **வாசனைகள், அனுபவ பதிவுகள், சம்ஸ்காரங்கள்** என எல்லாமே தேய்ந்து மறையும்.

அது எப்படி என்றால்?

நாம் நம் பெயருக்குப் பின்னால், நாம் படித்த பட்டப் படிப்பை போட்டுக் கொள்கிறோம் அல்லவா? அதாவது, BSc, MBA என்று பலரும் பலவாறாகப் போட்டுக் கொள்கிறோம்.

ஆனால், நாம் ஏன்? இதற்கு முன்னால் படித்த ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு போன்றவைகளை

எல்லாம் போட்டுக் கொள்வதில்லை? அதாவது, நாம் அதையெல்லாம் தாண்டி வந்து விட்டோம்.

ஆகவே, அவைகள் இனிமேல் நமக்குத் தேவையில்லை. மேலும், அவைகளைப் போட்டுக் கொள்வதினால், ஒரு அர்த்தமும் இல்லை.

மேலும், MBA படித்த ஒருவன், **நான் மூன்றாம் வகுப்பு படித்தேன்** என்று சொல்ல வேண்டுமா? அப்படி சொல்லவேண்டிய அவசியமும் இல்லை.

அதுப்போல, நமக்குள் நிகழ்ந்த அனுபவங்கள் இந்த உடல் மற்றும் மனம் சார்ந்தவைகள் என்பதினால், நாம் அவற்றைத் தாண்டி, நமக்குள் இருக்கும் சக்தியோடு, நம்மை நாம் அடையாளம் காணும் பொழுது, நம்முடைய **பழைய நினைவுகள், பதிவுகள், வாசனைகள்** எல்லாம், அர்த்தமற்றவையாகப் போகின்றன.

இதை அடைய வேண்டும் என்றால், பிரணவத்தின் பொருள் தெரிந்து, அதை உணர்வு பூர்வமாக ஆக்க வேண்டும்.

**எப்படி?**

இனிவரும், இந்தப் பகுதியைக் கவனமாகக் கற்றுக் கொள்ளுங்கள்.

முதலில், இந்த "**ஓம்**" என்ற பிரணவத்தை ஜெபிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்குக் காரணம், அது ஏற்கனவே, நம் சுவாசமாகவே வெளிப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. நாம்தான் அதை உணர முடியாதவாறு உள்ளோம்.

அதற்குக்காரணம், நம்மீது ஏற்றிவைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்கள் நம்மை, நம் உண்மை சொரூபத்தை அறிய முடியாதவாறு, "**நான் இன்னார்**" என்ற ஒரு வரையறைக்குள் நம்மை கட்டாயமாக திணித்துக் கொள்ள வைத்துவிட்டது.

அதனால்தான், நாம் நம்மை ஒரு மருத்துவர், வழக்கறிஞர், ஆடிட்டர், எஞ்சினீயர் என்று அழைத்துக் கொள்வதில் ஆனந்தம் அடைகிறோமே தவிர, தன்னை 'ஒரு ஞானி' என்றோ, அல்லது தன்னை அந்த "**ஈஸ்வரன்**", "**பிரம்மம்**" என்றோ கூறிக்கொள்வதில் குழப்பம் அடைகின்றோம்.

அந்த குழப்பத்திலிருந்து விடுபடக்கூடிய ஆன்ம ஞானப் பாடங்களைப் படிக்கவும் ஆர்வம் காட்ட மறுக்கிறோம். அதற்குக்காரணம், நாம் நம்மீது ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான மன அழுக்குகள் என்றே கூறலாம்.

அந்த மன அழுக்குகள் நம்மிடமிருந்து நீங்க வேண்டுமானால், நமக்கு ஆன்ம ஞானப்பாடங்கள் நம்முடைய அறிவுக்கு தெள்ளத் தெளிவாக விளங்க வேண்டுமானால், நாம் இந்த "**ஓம்**" என்பதை நன்கு பிடித்துக் கொள்ள வேண்டும். அதை அவசியம் அதிகாலை கேட்க வேண்டும்.

அதன் பொருள் புரிந்து, அதை நம்முள் நாம் உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு:-**

"**ஓம்**" என்ற ஒலிப்பேழை (ஆடியோ ரெக்கார்டிங்) பதிவிறக்கம் செய்து, அதனை கேட்க விரும்பும் அன்பர்கள் கீழே உள்ள இணையதள முகவரியில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**https://paraparam.in/om-mp3/**



## அனுபவ முறை:-

முதலில் 21 நாட்களுக்கு மட்டுமே, தினந்தோறும் வருகின்ற 24 மணி நேரத்தில் தினமும் ஒரு 45 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கி, அதுவும் விடியற்காலை 4 மணி முதல் 6 மணிக்குள் உள்ள இரண்டு மணி நேரத்தில், அவரவர்களுக்கு சௌகரியமான ஒரு நாற்பத்தைந்து நிமிடத்தை மட்டுமே எடுத்துக் கொள்ளவும்.

இனி, நாம் ஏற்கனவே கொடுத்துள்ள **"ஓம்"** என்ற தியான ஒலிப்பேழை உதவியுடன், ஒரு அமைதியான இடத்தில் உட்கார்ந்துக்கொண்டு, அந்த ஆடியோ பதிவை, வெளியில் மற்றவர்களுக்கு தொந்தரவு செய்யாதவாறு, ஒலிக்கவிட்டு, அதை நவீன **புளூடூத் ஹியர்போன்** மூலம், நம் காதுகளில் கேட்க மட்டுமே செய்ய வேண்டும். வாயால் உச்சரிக்கக்கூடாது.


இதை செய்வதற்கு முன்பாக, காலைக் கடன்களை முடித்துவிட்டு, குளிர்ந்த நீரில் குளித்து விட்டு வரவேண்டும். அப்போதுதான் தூக்கம் வராமலும், **சிறுநீர், மலம் கழித்தல்** போன்ற உபாதைகள் உண்டாகாமலும் இருக்கும்.

இந்த ஓங்காரத்தை விடாமல் **இருபத்தியோரு நாட்கள்** தொடர்ந்து செய்துவந்தால், நம் மனம் சத்துவகுண நிலைக்கு மேம்படும். அத்துடன், அமைதியும், ஆனந்தமும் நம்மிடம் உண்டாகும். மேலும், இனி செய்ய இருக்கின்ற செயல்களில் ஒரு நேர்த்தியும், அதற்கான ஒரு தெளிந்த முடிவை எடுக்கக் கூடிய மன நிலையும் உண்டாகும்.

இந்த **"ஓம்"** என்ற பிரணவத்தை காதுகளால் கேட்க, ஒரு இடத்தில் உட்காருவது என்பது, ஒரு நாற்காலியிலோ, அல்லது சோபாவிலோ, படுக்கை இருப்பிலோ, அல்லது பாயிலோ என, எதில் வேண்டுமானாலும் அவரவர்கள் சௌகரியத்திற்கு ஏற்றவாறு, சாதாரண சுகாசனத்தில் இயல்பாக முதுகுத் தண்டுவடம் நேராக இருக்குமாறு அவசியம் அமரவும். அதுவே போதுமானது. அதைவிடுத்து, பத்மாசனத்தில் அமர்ந்துக்கொண்டு, கால்களில் ஏற்படும் வலியினால் ஓங்காரத்தை கேட்பதற்கு இடையூறு செய்துக் கொள்ளக்கூடாது.

அவ்வாறு, சாதாரணமாக முதுகுத்தண்டுவடம் நேராக இருக்குமாறும், கழுத்து சாய்வாக இல்லாமலும், கீழே குனிந்து இல்லாமலும், நேராக இருக்குமாறு பார்த்துக் கொண்டு, ஒட்கார்ந்துக் கொண்டவுடன், முதலில் '**நாடிசுத்தி பிராணயாமம்**' ஒரு ஐந்து முறை அவசியம் செய்யவும்.

அதாவது, நாடிசுத்தி என்பது, மூச்சை மெதுவாக நமது இரு நாசித்துவாரங்களில் ஏதாவது ஒரு நாசித்துவாரத்தினை நம்முடைய கட்டை விரலால் அடைத்துக் கொண்டு, மற்றொரு நாசியில் மூச்சுக் காற்றை உள்வாங்கிக் கொண்டு, அதன் பிறகு, அடைத்த நாசியை திறந்து, அதன் வாயிலாக உள்வாங்கிய மூச்சை முழுவதுமாக வெளியேற்ற வேண்டும். அப்போது, உள்வாங்கிய நாசித்துவாரத்தை கட்டை விரலால் அடைத்துக் கொள்ள வேண்டும்.



அவ்வாறு, வெளியேற்றிய அதே நாசித்துவாரத்தின் வாயிலாக மீண்டும் மூச்சுக்காற்றை உள்வாங்கிக் கொண்டு, அதன்பிறகு, அடைக்கப்பட்ட மற்றொரு நாசி வழியாக மூச்சுக் காற்றை முழுவதுமாக வெளியேற்ற வேண்டும். இதை '**ஒரு சுற்று**' என்று கூறலாம். இவ்வாறு **ஐந்து சுற்றுக்கள்** செய்ய வேண்டும்.

அதன்பிறகு, அடியேனால் கொடுக்கப்பட்ட அந்த **"ஓம்"** என்ற பிரணவ மந்திர ஆடியோ பதிவை, அதில் கூறப்பட்ட முறையில், வாய்வழியாக உச்சரிக்காமல், அதாவது, வாய்விட்டு செபிக்காமல், நவீன உபகரணங்களாகிய செல்போன் அல்லது ஆடியோ பிளேயரின் மூலமாக, பதிவு செய்து வைத்துள்ள அந்த **"ஓம்"** என்ற ஓங்காரத்தை இசைக்க விட்டு, அதன் ஒலியை உங்களது காதுகளின் வழியாகக் கவனமுடன் கேட்க மட்டுமே செய்ய வேண்டும்.

இதுதான் **பண்டைய குருகுலக்கல்வி முறையில்** மாணவர்களுக்கு ஆசிரியர் உபதேசித்த வழிமுறையாகும்.

இதைத்தான் '**சிரவணம்**' என்று கூறப்படுகின்றது.

அவ்வாறு, அந்த ஒலிப்பேழை ஓடுகின்ற 45 நிமிடங்கள் முழுவதுமாக, அந்த ஓங்காரத்தை அமைதியுடன் கேட்கும்போது, அதில் இரண்டு "**ஓம்**" என்ற உச்சரிப்புகளுக்கு மத்தியில் வருகின்ற **அமைதியை மட்டுமே** மனம் கவனிக்க வேண்டும்.

அவ்வாறு, அந்த நிசப்தத்தை மட்டுமே மனம் கவனித்தல் என்பது '**மனனம்**' என்று கூறப்படுகின்றது இதுவே, "**சாட்சி பாவனை**" என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு, தினந்தோறும் என தொடர்ந்து, 21 நாட்கள் இடைவிடாமல் இதை செய்து முடித்துவிட்டால், அதன் பிறகு, எப்போதும் மனம் அந்த அமைதியில் அப்படியே நிற்கும்.

அதற்குப் பெயர்தான் '**நிதித்யாஸனம்**' என்று இங்கு கூறப்படுகின்றது.

இதையே சாஸ்திரம் **சிரவன, மனன, நிதித்யாஸனம்** என்று அழைக்கின்றது.

இந்த அப்பியாஸத்தை அவசியம் தடைகள் வராமல், தொடர்ந்து, 21 நாட்கள் இடைவிடாமல் கேட்க மட்டுமே முயற்சிக்க வேண்டும். இடையில், ஏதேனும் தடைகள் வந்தால், மீண்டும் முதலில் இருந்து, தொடர்ந்து இருபத்தியோரு நாட்கள் இடைவிடாமல் தினமும் விடியற்காலையில் ஒரு 45 நிமிடங்கள் கட்டாயம் கேட்க மட்டுமே செய்ய வேண்டும்.

அவ்வாறு, இடைவிடாமல் இதைக்கேட்டு முடித்தவர்களுக்கு மட்டுமே, இந்த "**ஓம்**" என்பது, அவர்களுக்கு சித்தியாகும்.


ஏனெனில், மந்திரம் கற்றுக் கொள்கின்ற மாணவர்களுக்கு, அவர்களின் மனதின்திரம் மேம்பட வேண்டும் என்பதற்கான, எளிய வழிமுறையை வழிவகுத்துக் கொடுத்த ஆசிரியருக்கு நன்றி செலுத்துவதின் வாயிலாக, அதே மந்திரம் மாணவர்களது வாழ்க்கையில் பல வளமைகளை வழங்கக் கூடிய சாத்தியக்கூறுகளைக் காட்டிக்கொடுக்கும்.

அதுவே, அந்த சத்துவகுணத்திற்கு மேம்படாத மற்றவர்களின் மனநிலை என்பது, சாஸ்திர விசயங்களைக் கற்றுக்கொள்ளவதில் ஒரு போதும் நாட்டம் இருக்காது. அத்துடன், இதுப்போன்ற மந்திரங்கள் எதையும் கேட்க வேண்டிய ஆர்வமும் இருக்காது. எல்லாம் என்னுள்ளே இருக்கின்றது, அந்த அகக்குரு கற்றுக் கொடுக்கும் என்ற அகங்காரம் மட்டுமே அவர்களிடம் மேலோங்கி இருக்கும்.


அத்துடன், அவர்களுக்கு அந்த "**ஓம்**" என்ற ஓங்காரத்தை கேட்கக்கூடிய அவசியம் உண்டாகாது. அதற்குக்காரணம், அவர்களிடம் **மனத்தூய்மை** உண்டாகவில்லை என்பதே உண்மையாகும்.

நன்றி!

**ஓம் தத் ஸத்!**



# ஆங்காரம்
# நீக்கும்
# ஓங்காரம்



ப்ரக்ஞன்